# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-21** **தேதி:29.06.10**

## விலை உயர்வை ரத்து செய்.

மார்ச் மாதத்தில் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்த போது மத்திய அரசு பெட்ரோல் டீசல் விலையினை கடுமையாக உயர்த்தியது. அதனை எதிர்த்து இடது சாரிகளும் தொழிற்சங்கங்களும் கடுமையாக போராட்டம் நடத்தியது. மத்திய தொழிற்சங்கங்கள் சிறை நிரப்பும் போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களை நடத்தினர். இடது சாரிகள் பாராளுமன்றத்தில் வெட்டுத் தீர்மானம் கொண்டு வந்தது. அந்த வெட்டுத் தீர்மானத்தை தனது அதிகார பலம் கொண்டு ஆளுகின்ற மத்திய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கம், ஒரு சில எதிர்கட்சிகளை விலைக்கு வாங்கி முறியடித்தது. அரசாங்கம் காப்பாற்றப் பட்டதாக ஒரு சிலர் சொன்னாலும், பலி கொடுக்கப்பட்டது சாதாரண மக்களின் நலன்கள் தான். அதன் விளைவாக அத்தியாவசிய பொருட்களின் விலைகள் கடுமையாக உயர்ந்ததை நாம் அறிவோம். அதன் விளைவாக பண வீக்க விகிதம் இரட்டை இலக்கத்தை அடைந்தது. டிசம்பர் மாதத்தில் விலை குறையும் என திட்டக் கமிஷன் துணைத் தலைவர் மாண்டே சிங் அலுவாலியா போன்றவர்கள் ஜோதிடம் கூறினர்.

நேற்று மீண்டும் மத்திய அரசு பெட்ரோல் விலையினை மட்டுமல்லாமல், டீசல், மண்ணெண்ணை மற்றும் சமையல் வாயு ஆகிய அனைத்தின் விலைகளையும் உயர்த்தி உள்ளது. லிட்டர் ஒன்றுக்கு பெட்ரோலுக்கு ரூ3.50ம், டீசலுக்கு இரண்டு ரூபாயும், மண்ணெண்ணைக்கு மூன்று ரூபாயும், சமையல் வாயுவின் சிலின்டர் ஒன்றுக்கு 35ரூபாயும் உயர்த்தியுள்ளனர். தற்போதே அபாய கட்டத்தில் 17 சதவிகிதம் என்று உள்ள உணவு தானிய பண வீக்கம் என்பது இந்த டீசல் விலை உயர்வால் இன்னமும் அதிகமாகும் என்பது தான் உண்மை. விலை வாசி உயர்வால் விழி பிதுங்கிக் கொண்டுள்ள சாதாரண ஏழை எளிய மக்கள் மேலும் திண்டாட்டத்திற்கு உள்ளாவாரகள்.

அரசாங்கம் கீர்த்தி பரேக் கமிட்டியின் பரிந்துரையின் அடிப்படையில் இனி மேல் பெட்ரோலிய பொருட்களின் விலையை ஒழுங்கு படுத்துவதைக் கைவிட்டு விட முடிவு செய்துள்ளது. எனவே சந்தையே பெட்ரோலிய பொருட்களின் விலையை முடிவு செய்யுமாம். இது மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். சர்வதேச சந்தையில் மிகப் பெரிய விலையேற்றம் இல்லாத இந்த சூழ்நிலையில், மூன்று மாதத்திற்குள் தற்போது மீண்டும் விலையேற்ற வேண்டிய அவசியமில்லை.

ஏழை எளிய மக்களை பாதிக்கும் பெட்ரோலிய பொருட்களுக்கு மானியம் வழங்க மறுக்கும் மத்திய அரசு கடந்த நிதி நிலை அறிக்கையில் மிகப் பெரிய முதலாளிகளுக்கு வரிச் சலுகையாக ஐந்து லட்சம் கோடி ரூபாய்களை வழங்கியுள்ளதை நாம் கவனிக்க வேண்டும். மிகப்பெரிய முதலாளிகளுக்கு வாரி வழங்கிக் கொண்டு நசிந்து கிடக்கும் ஏழை எளிய மக்களின் வாழ்க்கையை பாதிக்கக் கூடிய வகையில் மத்திய அரசு எடுக்கும் முடிவுகளை நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டு வாளாவிருக்கக் கூடாது. இதை எதிர்த்து போராடும் ஜனநாயக சக்திகளோடு இணைந்து நாமும் போராட வேண்டும். "மத்திய அரசே! மக்களை பாதிக்கும் பெட்ரோலிய பொருட்களின் விலை உயர்வை உடனடியாக ரத்து செய்" என உரக்கக் குரல் கொடுப்போம்.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**M.முருகையா**
**மாநில செயலர்(பொறுப்பு)**